துஷ்பிரயோகத்தில் இருந்து விடுதலை
*www.blainn.cc/abuse-free*
இந்த இணையதளமானது, வாழ்க்கைத் துணையைத் துஷ்பிரயோகம் செய்பவர்களிடமிருந்து மீள்வோருக்கான ஒரு ஆன்லைன் ஆதரவுக் குழு ஆகும்.

துஷ்பிரயோகம் செய்யும் ஆண்களுக்கான ஆலோசகர்களின் பி.சி. கூட்டுறவு
1 (800) 360-8315
இது உறவுமுறைகளில் துஷ்பிரயோகம் செய்யும் ஆண்களுடன் பணி புரியும் ஆலோசகர்களின் ஒரு வலைப்பின்னல் ஆகும்.

போதைப் பொருளுக்கு அடிமையாதல் மற்றும் மன ஆரோக்கியத்திற்கான சிஎஎம்எச் (CAMH) மையம்
1 (800) 463-2773 / *www.camh.net*

வீட்டு வன்முறைக்கான ஆதாரவளங்கள்
1 (800) 273-8255 / *www.domesticviolence.ca*
இந்த இணையதளத்தில் குடும்ப வன்முறைச் சட்டங்கள் மற்றும் அது தொடர்பான சட்டத்துடன் தொடர்புடைய பல்வேறு தலைப்புகளில் கல்வி ஆதாரவளங்கள் உள்ளன.

மறுதலிப்பு: இந்த பிரசுரமானது பொதுவான தகவல்களையே கொண்டுள்ளது. உங்களது குறிப்பிட்ட நிலைமை பற்றிய சட்டபூர்வ அறிவுரையைப் பெறுவதற்கு இது மாற்று அல்ல.

இந்த திட்டமானது சிட்டிசன்ஷிப் அன்ட் இமிக்ரேஷன் கனடாவினால் பெருமிதத்துடன் நிதியளிக்கப்பட்டது ஆகும்.

Citizenship and Immigration Canada
Citoyenneté et Immigration Canada

ஃபேமிலி சர்வீஸ் டொரோண்டோ நிறுவனமானது, டொரொண்டோ, ஒன்டேரியோவின் ரெக்ஸ்டேல் விமன்ஸ் சென்டரை, அவர்களது சமுதாயப் பங்குதாரர் ஆக ஆற்றிய பணிக்காக நன்றி தெரிவிக்க விரும்புகிறது.

FAMILY SERVICE TORONTO
For People. For Change.

RWC

TAMIL MEN

# இதை நான் முன்னரே அறிந்திருந்தால்...

## குடும்ப வன்முறை பற்றி ஆண்களிடம் ஆண்கள் பேசுகின்றனர்



பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறையைத் தடுப்பதற்கான தகவல்கள் மற்றும் ஆதாரவளங்களை இந்த சிற்றேடு உங்களுக்கு வழங்குகிறது. இந்த பிரசுரங்கள் தமிழ் சமுதாயத்தினரால் தமிழ் சமுதாயத்திற்காக, பணிக்குழுக்கள் மற்றும் கவனக்குவிப்பு குழுக்களின் கலந்துரையாடல்கள் மூலமாகவும், ஜஸ்டிஸ் கனடாவின் இணையதளத் தகவல்கள் மூலமாகவும் உருவாக்கப்பட்டன.

நீங்கள் அன்பு செலுத்துபவர்களை துன்புறுத்துகிறீர்களா?

உங்கள் இல்லத்தில் சச்சரவு இருக்கிறதா?

உங்கள் குழந்தைகளுக்கு நல்ல முன் மாதிரியாக நீங்கள் திகழ்கிறீர்களா?

உங்களது குடும்பத்தை இழந்து விடுவோம் என்று நீங்கள் அஞ்சுகிறீர்களா?

இந்த சிற்றேடில், துஷ்பிரயோகம் பற்றியும் இந்த மரியாதையற்ற, தீங்கு நிறைந்த மற்றும் அழிவுக்கு வழி வகுக்கும் நடத்தையில் ஈடுபடுவதன் விளைவுகள் பற்றியும் முக்கியமான தகவல்கள் உள்ளன. துஷ்பிரயோகம் மற்றும் குடும்ப வன்முறையைத் தடுப்பதற்கும் உதவியை நாடுவதற்கும் ஆண்களுக்கான தகவல்கள் மற்றும் வள ஆதாரங்களை இந்த சிற்றேடு அளிக்கிறது.

## துஷ்பிரயோகத்தின் வடிவங்கள்

1. உடல் ரீதியான துஷ்பிரயோகம்
2. பாலியல் துஷ்பிரயோகம்
3. புறக்கணிப்பு
4. உளவியல் ரீதியான அல்லது உணர்வு ரீதியான துஷ்பிரயோகம்
5. பொருளாதார ரீதியிலான அல்லது நிதி ரீதியிலான துஷ்பிரயோகம்

கனடாவின் கிரிமினல் சட்ட விதியானது தாக்குதல்/பாலியல் தாக்குதல் மற்றும் கிரிமினல் தொந்தரவு போன்ற குறிப்பிட்ட வகை துஷ்பிரயோகங்களுடன் தொடர்புள்ள குற்றங்களுக்கான குறிப்பிட்ட சட்ட விளைவுகளை வரையறுக்கிறது.

அந்தந்த மாகாணத்தைப் பொறுத்து வாழ்க்கைத் துணை மீதான துஷ்பிரயோக வழக்குகளில் குற்றம் புரிந்தவர்கள் மீது வீட்டில் நிகழும் வன்முறைக்காக நீதிமன்றங்களில் வைத்து வழக்கு தொடுக்கப்படும் மற்றும் அவர்கள் பாதிக்கப்பட்டவர்/சாட்சி அளிப்பவருக்கான உதவி நிகழ்ச்சிகளிலும் கட்டாயமான ஆற்றுபடுத்தல் நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ள வேண்டும்.

## சாத்தியமான கிரிமினல் குற்றச்சாட்டுகள்

- தாக்குதல், உடல் ரீதியாகத் தீங்கு இழைக்கும் தாக்குதல்
- பாலியல் ரீதியான தாக்குதல், உடல் ரீதியாகத் தீங்கு விளைவிக்கும் பாலியல் தாக்குதல்
- ஆயுதம் கொண்டு பாலியல் தாக்குதல்
- குற்றம் சார்ந்த தொந்தரவு (சில நேரங்களில் "பின் தொடர்தல்" என்று அழைக்கப்படுகிறது)
- அச்சுறுத்தல்களை உச்சரிப்பது
- குறும்புச்சேட்டை
- மிரட்டல்
- சமாதானத்திற்கான ஒரு பிணைப்பு அல்லது நன்நடத்தை ஆணை போன்ற நீதிமன்ற பாதுகாப்பு ஆணையை மீறுதல்
- கொலை முயற்சி, கொலை

கூடுதல் தகவல்களுக்கு, குடும்ப வன்முறைக்கு முன்முயற்சியாக உள்ள இந்த ஜஸ்டிஸ் கனடா இணையதளத்தைத் தயவுசெய்து பாருங்கள்:
*http://www.justice.gc.ca/eng/pi/fv-vf/rep-rap/spous-conju.html*

## சாத்தியமான விளைவுகள்

- சட்டத்துடன் பிரச்சனை (கிரிமினல் பதிவு)
- வேலையற்று இருப்பதற்கான அதிகரித்த வாய்ப்பு
- மன உளச்சல் மற்றும் பதற்றம், மன அழுத்தம்
- உங்களது குடும்பத்தாருக்கும் உங்களுக்கும் தீங்கிழைத்துக் கொள்ளுதல்
- குடும்பம் சிதறுவது
- நிதி நெருக்கடி
- குழந்தைகள் ஸ்திரமான சூழலை இழப்பது
- குழந்தைகள் உங்களது நடத்தையிலிருந்து கற்றுக் கொள்வார்கள்
- கால விரயம் ஆகி சட்டக் கட்டணங்கள் தேவைப்படும்

## எச்சரிக்கை செய்யும் அறிகுறிகள்:

- மதுபானம் மற்றும் போதை பொருட்களின் மிகையான உபயோகம்
- மன அழுத்தத்தையும், உதவியற்றும் உணர்வது
- கோபம் மற்றும் அவமரியாதையைக் காட்டி மற்றவர்களை அச்சுறுத்துவது
- பிரச்சனைகளைக் கையாள்வதற்கு வன்முறை ஒரு வழி என்று உங்களுக்கு கற்பிக்கப்பட்டது

## இதுவே மாற்றத்திற்கான நேரம். இதுவே நிறுத்துவதற்கான நேரம்!

துஷ்பிரயோகம் செய்யும் நடத்தை என்பது எங்களது தெரிவுஆகும்.

குற்றம் இழைப்பவரின் செயல்கள் எதிர்பாராமல் நிகழ்வது அல்ல. மற்றொரு நபரைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தில் அவை தெரிவு செய்யப்பட்டவை ஆகும். துஷ்பிரயோகம் என்பது ஒரு தெரிவு என்பதால் அந்த குற்றம் இழைத்தவர் துஷ்பிரயோகம் இல்லாமல் செயல்படுவதைத் தேர்வு செய்ய முடியும். உதவி நாடுவதற்கு வெட்கப்படத் தேவையில்லை.

துஷ்பிரயோக நடத்தை துஷ்பிரயோகம் செய்பவரின் முழுப் பொறுப்பாகும். இத் துஷ்பிரயோக நடத்தையை பாதிக்கப்பட்டவர் தூண்டியதாகவோ அல்லது பங்களித்ததாகவோ எதுவும் இதில் இல்லை.

திருக்குறள்

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்ஆற்றின் நின்ற துணை.

(உண்மையாக) இல்லறத்தில் வாழ்பவன் என்பவன் அறத்தின் இயல்பை உடைய பெற்றோர் மனைவி மக்கள் மூவருக்கும் நல்வழியில் நிலை பெற்ற துணையாவான்.

(திருக்குறள் 41)